மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.02/2020
உள்
அசல் வழக்கு எண்.12/2017

-------------

ஷாஜகான்
(மேற்படியாரின் அங்கீகாரம் பெற்ற
முகவர் காதர் பாஷா மூலம்) ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ருக்மணி
2. கிருபாகரன்
3. சித்ரலேகா
4. சந்திரிகா
5. சாந்தினி
6. கார்த்திகேயினி
7. சிவக்குமார்
8. உஷாதேவி
9. சரவணநாதன்
10. எம்.வேலுச்சாமி
11. சார்பதிவாளர், சாத்தூர்
12. மாவட்ட பதிவாளர், விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 27.08.2020ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 03.08.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஏ.விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், 11, 12 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசுப்பணிகள் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரைகளை

நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9 -ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், கடந்த 06.09.2018ம் தேதியில் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 27.08.2020ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

தாவா வழக்கில் 06.09.2018ம் தேதி வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக சிறப்பு பட்டியலில் வழக்கு போடப்பட்டிருந்தது. இருப்பினும் 03.09.2018ம் தேதியில் மனுதாரர் கீழே விழுந்து மனுதாரர் பின்புற முதுகிலும், கழுத்திலும் தசை பிடிப்பு ஏற்பட்டும், நடக்க முடியாமல் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு கட்டாய ஓய்வில் இருந்து வந்துள்ளார். அதனால் மனுதாரரால் நீதிமன்றத்தில் 06.09.2018ம் தேதியில் நேரில் ஆஜராக இயலாமல் போனது. மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணையும் மேற்கொள்ள முடியாமல் போனது. அதன் தகவலை மனுதாரர் வழக்கறிஞருக்கு தெரிவித்து தாவா வழக்கில் மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ள இயலாத தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். அதன்பின்பு மனுதாரருக்கு ஏற்பட்ட தசைபிடிப்பு மற்றும் வலி அதிகமானது. மனுதாரர் மருத்துவ சிகிச்சையிலும், கட்டாய ஓய்விலும் தொடர்ந்து இருந்து வந்து கடந்த 19.04.2020ம் தேதியில் முழுமையாக குணமடைந்து மனுதாரர் வழக்கறிஞரை தொடர்பு கொண்டபோது அவர் தாவா வழக்கு மனுதாரர் தரப்பில் 06.09.2020ம் தேதியில் சாட்சி விசாரணை மேற்கொள்ளாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்ற விபரத்தை கூறி கொரோனா ஊரடங்கிற்கு பின்பு நேரில் அலுவலகம் வர வழக்கறிஞர் மனுதாரரை வலியுறுத்தியுள்ளார். அதன்பின்பு கொரோனா ஊரங்கின் காரணமாக மனுதாரரால் வீட்டைவிட்டு வெளியே வராமல் மனுதாரர் வழக்கறிஞரை நேரில் சென்று பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன்பின்பு அரசு கொரோனா ஊரடங்கில் சில தளர்வுகளை அறிவித்தபடியால் கடந்த 17.08.2020ம்

தேதி மனுதாரர் வழக்கறிஞரை நேரில் சென்று பார்த்த சமயத்தில் தாவா வழக்கில் உள்ள மனுதாரர் கட்சியை மெய்பிக்க மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று மனுதாரர் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். இவ்வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. மனுதாரர் தரப்பு கட்சியை மெய்பிக்கவும், தாவா வழக்கை முழுமையாக தீர்மானிக்கவும் நீதிமன்றம் 06.09.2018ம் தேதி தாவா வழக்கில் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் தாவா வழக்கில் மனுதாரர் தரப்பு கட்சியை மெய்ப்பிக்க முடியாமல் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்வதற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகள் இருக்கப் போவதில்லை. மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய உரிய காலத்தில் மனு செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கவும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே தாவா வழக்கைப் பொறுத்து நீதிமன்றம் 06.09.2018ம் தேதியில் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 27.08.2020ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்ட தசை பிடிப்பு மற்றும் வலி அதிகமானது என்றும், மனுதாரர் மருத்துவ சிகிச்சையிலும், கட்டாய ஓய்விலும் தொடர்ந்து இருந்து வந்து கடந்த 19.04.2020ம் தேதியில் முழுமையாக குணமடைந்து மனுதாரர் வழக்கறிஞரை தொடர்பு கொண்ட போது அவர் தாவா வழக்கு மனுதாரர்/வாதி தரப்பில் 06.09.2018ம் தேதி விசாரணை மேற்கொள்ளாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்ற விபரத்தை கூறி கொரோனா ஊரடங்கிற்கு பின்பு நேரில் அலுவலகம் வர மனுதாரர் வழக்கறிஞர் வலியுறுத்தியுள்ளார் என்றும், அதன்பின்பு வராமல் மனுதாரர் வழக்கறிஞரை நேரில் சென்று பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது என்று சொல்லியிருப்பது கற்பனையான கதையாகும். மனுதாரர் காலதாமதத்திற்கு சொல்லியிருக்கும் காரணங்கள் பொய்யான காரணங்களாகும்.

மேலும் மனுதாரர் மருத்துவ சிகிச்சையில் இருந்து வந்ததாக சொல்லி உள்ள நிலையில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும், எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றும், எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றம் மனுதாரருக்கு விசாரணை செய்ய போதுமான கால அவகாசம் வழங்கியும் மனுதாரர் அதை பயன்படுத்தி கொள்ளவில்லை. மனுதாரர்/ வாதி சாத்தூர் பகுதியில் குடியிருந்தும் அவரது வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை என்று சொல்லியிருப்பது நம்பமுடியாத கற்பனை கதையாக உள்ளது.மனுதாரர் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட நோகத்கதில் மனு தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

<u>4). (11, 12 **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.**01/2020**ல் தாக்கல் செய்துள்ள எதிர்உரையை இ.ம.எண்.**02/20**க்கு ஏற்றுக்கொள்ளுமாறு மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது)** 11, 12 **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.**01/2020**ல் தாக்கல் செய்துள்ள செய்துள்ள எதிர்உரை சுருக்கம்:-**</u>

மனுதாரர் தனது மனுவில் அசல் வழக்கானது 06.09.2018ம் தேதியில் விசாரணைக்காக போடப்பட்டது என்றும், இருப்பினும் 03.06.2018ம் தேதியில் கீழே விழுந்துவிட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் மனுதாரர் தனது மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் 05.09.2018ம் தேதியில் பெறப்பட்ட மருத்துவ சான்றினை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் தனது வாக்குமூல விலாசத்தில் சாத்தூர் என்று கூறியுள்ளார். ஆனால் சிகிச்சை மருத்துவர் கோவில்பட்டி என்று உள்ளது. மனுதாரர் எங்கு வைத்து சிகிச்சை மேற்கொண்டார் என்று எந்த விளக்கமும் தெளிவாக தெரிவிக்கப்படவில்லை. மேலும் எப்போது உடல்நிலை சரியானது என்று எந்த விளக்கமும் தெரிவிக்கவில்லை. அதனால் மனுதாரரின் மனுவானது சந்தேகத்திற்கு இடமாக உள்ளது. மேலும் மருத்துவ சான்று படிக்கும், மருத்துவரின் அறிவுறுத்தல் படிக்கும் 10 நாட்கள் சிகிச்கை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால்மனுதாரர் 720

நாட்கள் கழித்து மனு தாக்கல் செய்துள்ளதற்கான காரணத்தை தெளிவாக தெரிவிக்கவில்லை. மேலும் காலதாமத மனுவிற்கு Sufficient cause இருக்க வேண்டுமென்பது சட்ட நிலைப்பாடாகும். மேற்படி மனுதாரர்தாக்கல் செய்தள்ள மனுவானது எந்த முகாந்திரமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வழக்கினை காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவே ஒருவரின் பேரல் வழக்கிட்டும், அவர் வெளிநாடு சென்றும், அவருக்காக பதிலியால் மூலமாக வழக்கு நடத்த அனுமதி கோரியும் வழக்கு விசாரணைக்கு ஏற்பட்ட காலத்தில் வேண்டுமென்றே வழக்கினை நடத்தாமல் இருந்துவிட்டு தற்போது பொய்யான காரணங்கள் கூறி மனு தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). தீர்வு:-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் கடந்த 06.09.2018ம் தேதியில் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 27.08.2020ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். மேலும் இந்த வழக்கினைப்

பொறுத்து இ.ம.எண்.01/2020 மனுவும் செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் மற்றும் இ.ம.எண்.01/2020 மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது, நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, கடந்த 06.09.2018ம் தேதியில் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 27.08.2020ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.